# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 25 செவ்வாய்க்கிழமை 10.12.2024 கதிர் 76

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




# தமிழர்கள் குறித்து அனுரவின் அரசுக்கும் அக்கறை இல்லை!

## – திருமலையில் உறவுகள் ஆதங்கம் –




**திருகோணமலை, டிச. 10**

**அனுர தலைமையிலான இந்த அரசாங்கமும் தான் சார்ந்த சமூகத்தையே பார்க்கிறது. தமிழ் மக்களுக்கான எந்தவித தீர்வும் இல்லை என்று திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி செபஸ்டியன் தேவி குற்றஞ்சாட்டியுள்ளார்.**

7➤



## வவுனியாவில் தீச்சட்டியை ஏந்தி நீதி கேட்டு போராடிய காணாமல்போனோரின் உறவுகள்

வவுனியா, டிச.10

சர்வதேச மனித உரிமைகள் தினமான இன்று வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

7➤

## தேசியப் பட்டியல் எம்.பி விவகாரம் ஐக்கிய மக்கள் சக்திக்குள் இழுபறி !

கொழும்பு, டிச. 10

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல், தெரிவு தொடர்பில் கடும் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளதாக, கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது பற்றி மேலும் குறிப்பிட்ட அவர்:

"பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஐந்து தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயர் மாத்திரம் அதில், குறிப்பிடப்பட்டது. மிகுதியை யாருக்கு வழங்குவது என்பது குறித்து தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை இடம்பெறுகிறது.

இப்பட்டியலுக்குரியவர்களை இதுவரை நியமிக்காதிருப்பது தொடர்பில், பல்வேறு மாறுபட்ட கருத்துக்களும், விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் பல அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்ததால் கூட்டணி என்ற அடிப்படையில் பல இணக்கப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

தேசியப் பட்டியலுக்குள் உள்வாங்கப்பட வேண்டிய முக்கியமான நபர்களும் உள்ளனர். அத்துடன் மேலும் சிலர், தேசிய பட்டியலுக்காக கோரிக்கை விடுத்துமுள்ளனர்.

7➤

## இந்தியா பயணம்



கொழும்பு, டிச. 10

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மூன்று நாள் உத்தியோகப்பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியாவுக்குச் செல்லவுள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை இந்தியாவுக்கான உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் உட்பட அரச உயர்மட்டத்

7➤

## நீதி வேண்டி நீளும் துயரம்.....!



சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இன்றைய தினம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தினர் யாழ்ப்பாணம் பொதுசன நூலக மூன்றலில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். தம் உறவைத் தொலைத்தவர்களின் நெச்சு கனக்கும் காட்சி இது. (படம் : யாழ். தீபன் )

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# யாழில் உயிரைப் பறிக்கும் திடீர் காய்ச்சல் : நால்வர் பரிதாப மரணம்

யாழ்ப்பாணம், டிச 10

யாழ்ப்பாணத்தில திடீர் காய்ச்சல் காரணமாக கடந்த மூன்று நாட்களில் நால்வர் உயிரிழந்துள்ள நிலையில், பொதுமக்கள் இது தொடர்பில் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்று சுகாதாரத்துறையினர் எச்சரித்துள்ளனர்.

காய்ச்சல், இருமல் மற்றும் மூச்சுத் திணறல் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலையை நாட வேண்டும் என்றும் அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

காய்ச்சல் காரணமாக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட இவர்கள், நோய் திடீரெனத் தீவிரத்தன்மை அடைந்து உயிரிழந்துள்ளனர்.



இவர்களின் சுவாசத் தொகுதி கடும் பாதிப் படைந்துள்ளமை மருத்துவ அறிக்கைகளில் தெரியவந்துள்ள நிலையில் உயிரிழப்புக்கு எலிக்காய்ச்சல் அல்லது உண்ணிக்காய்ச்சல் காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வரணி வடக்கு பகுதியை சேர்ந்த கோகிலான் தவராசா (வயது 60) மூன்று தினங்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார்.

அதேபோன்று பருத்தித்துறையைச் சேர்ந்த 40 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் சாதாரண காய்ச்சல், இருமல் அறிகுறிகளுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அதேவேளை காய்ச்சல், இருமல் அறிகுறிகளுடன் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் 28 வயதுடைய இளைஞர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார்.

நாவற்குழியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஒருவர் காய்ச்சல், இருமல் அறிகுறிகளுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

சாதாரண காய்ச்சல் நிலைமையில் இருந்த இவர்களுக்கு திடீர் என நோய் தீவிரத்தன்மை அதிகரித்ததை அடுத்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர். பருத்தித்துறை மற்றும் கிளிநொச்சி வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டிருந்தவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

அங்கு நோய்த் தன்மை சடுதியாக தீவிரமடைந்ததை அடுத்து சிகிச்சை பெற்று வந்த நால்வரும் உயிரிழந்தனர்.

இவர்களின் உயிரிழப்புக்கு எலிக்காய்ச்சல் அல்லது உண்ணிக்காய்ச்சல் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. அல்லது ஏதேனும் வைரஸ் தொற்றுக் காய்ச்சலாக இருக்கலாம் என்றும் கருதப்படும் நிலையில், உயிரிழந்தவர்களின் உடல்கூற்று மாதிரிகள் சட்டமருத்துவ அதிகாரியால் மேலதிக சோதனைகளுக காகக் கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளன.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தபோது, மூன்று நாள்களுக்குள் ஏற்பட்டுள்ள இந்த உயிரிழப்புகளை சாதாரண விடயமாகக் கடந்துவிட முடியாது என்று தெரிவித்தார்.

மேலும், கடுமையான சுவாசத் தொகுதி பாதிப்புக் காரணமாகவே இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக் கின்றன.

கடந்த சில நாள்களாக வடக்கில் கடும் மழை பெய்திருக்கும் நிலையில் எலிக்காய்ச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன.

ஆனால், இந்த உயிரிழப்புக்களுக்குக் எலிக்காய்ச்சல் காரணம் என்று இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. உண்ணிக்காய்ச்சல் அல்லது ஏதேனும் வைரஸ் காய்ச்சல்கூடக் காரணமாக இருக்கலாம்.

கொழும்பில் இருந்து ஆய்வறிக்கை வந்த பின்னரே காரணத்தைச் சரியாகக் கூறமுடியும்.

ஆயினும், பொதுமக்கள் இது தொடர்பாக விழிப்புடன் செயற்பட வேண்டியது அவசியம்.

இந்நிலையில், பொதுமக்கள் சுகாதாரத்தைச் சரியாகப் பேணிச் செயற்பட வேண்டியது அவசியம் என்பதுடன் ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கம் மற்றும் சுத்தமான குடிதண்ணீர் பாவனை அவசியமானது.

அத்துடன் காய்ச்சல், இருமல் அறிகுறிகள் காணப் பட்டால் உடனடியாகக்த் தகுதி வாய்ந்த வைத்தியரை நாடி உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கலைமலர் சஞ்சிகையின் வெளியீட்டு விழா







கோப்பாய், டிச. 10


கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வருடாந்த வெளியீடான கலைமலர் சஞ்சிகையின் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வஅம்பிகை நந்தகுமரனும், கௌரவ விருந்தினராக கல்விக் காருண்யன் ஈ.எஸ். பி நாக ரத்தினம், கலாசாலையின் முன்னாள் அதிபர் வீ. கருணலிங்கம், கலாசாலை சிவன் ஆலயப் பிரதம குரு சிவசிறி பா. செல்வசேனக்குருக்கள், டாக்டர் க. ஜெயச்சந்திரமூர்த்தி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கலாசாலையின் பிரதி அதிபர் த. கோபாலகிருஷ்ணன் வரவேற்புரையையும் மலராசிரியர் கு. பாலஷண்முகன் வெளியீட்டுரையையும் விரிவுரையாளர் சி. மனோகரன் நன்றியுரையையும் ஆற்றினர். நிகழ்வின் ஆரம்பத்தில் சிவன் ஆலயத்தில் விசேட பூசை இடம்பெற்று கல்வியங்காடு சுதா ரஜீவன் குழுவினரின் மங்கல இசையுடன் வரவேற்பு ஊர்வலம் இடம்பெற்றது. விசேட கல்வி நெறி ஆசிரிய மாணவி முகமட் அன்சார் அஸ்மிலா பேகம் நிகழ்வுகளை முன்னிலைப்படுத்தினார். (இ)











இலங்கைக்கான மலேசிய உயர் ஸ்தானிகர் . பத்லி ஹிஷாம் ஆதம், கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரட்ணசேகரவைச் சந்தித்துக் கலந்துரையாடினார். திருகோணமலையில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் இன்று காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதன் போது கிழக்கு மாகாண அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (படங்கள்: ஹஸ்பர் ஏ.எச்)

# கட்டுப்பாடுகளுடன் வாகன இறக்குமதி அனுமதி தொடர்பில் ஆராய்கிறது அரசு!



கொழும்பு, டிச 10

சில கட்டுப்பாடுகளுடன் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படும் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சிங்கள தொலைக்காட்சி நிகழ்ச்சி யொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வாகன இறக்குமதி தொடர்பில் முடி வெடுக்கும் போது, நாட்டின் கையிருப்பு மற்றும் பொருளாதாரம் உள்ளிட்டவை கவனத்திற் கொள்ளப்படும்.

வாகன இறக்குமதி தொடர்பில் முரண்பாடான விளம்பரங்களை வெளியிட்டு மக்களை குழப்ப வேண்டாம் என்று நான் சில நிறுவனங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

ஏனென்றால், வாகன இறக்குமதி தொடர்பில் முடிவெடுக்கும் போது, நாட்டின் கையிருப்பு மற்றும் பொருளாதாரம் மீது அக்கறை செலுத்தி, சிந்தித்து முடிவு எடுக்கப்படும்.

பொருளாதாரத்தை பாதிக்கும், அல்லது பொருளாதாரத்திற்கு கடுமையான அழுத்தத்தை ஏற்படுத்தும் வகையில், வாகன இறக்குமதி தொடர்பான முடிவினை எடுக்க நாங்கள் தயாராக இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வாகன இறக்குமதி தொடர்பில் அரசாங்கம் உறுதியான தீர்மானம் எதனையும் அறிவிக்காத நிலையில், சில நிறுவனங்கள் வாகன இறக்குமதி தொடர்பில் முரண்பாடான கருத்துக்களை தெரிவித்து பண மோசடியில் ஈடுபட்டுள்ளதாக பேராசிரியர் அமிந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்குவதாக தற்போதைய அரசாங்கம் தெரிவித்திருந்த போதிலும், வாகன இறக்குமதி தொடர்பில் உறுதியான முடிவு எதனையும் அரசாங்கம் வெளியிடவில்லை.

எனினும், எதிர்காலத்தில் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும் என்ற கருத்தை மக்கள் மத்தியில் உருவாக்கி புதிய வாகனங்களுக்காக சில நிறுவனங்கள் இலட்சக்கணக்கான ரூபாவை முற்பணமாக பெற்றுக் கொள்வதாக பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## தேங்காய் பற்றாக்குறையால் இலாபம் ஈட்ட திட்டமிடும் வியாபாரிகள்



கொழும்பு, டிச 10

நாட்டில் தேங்காய்க்கு தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பினால் மக்கள் கடும் சிரமத்திற்குள்ளாகியுள்ள நிலையில் இந்த ஆண்டும் தேங்காய் ஏற்றுமதி செய்து பெரும் இலாபம் ஈட்டுவதற்கு வியாபாரிகள் எதிர்பார்த்துள்ளனர் என்று மக்கள் போராட்டக் கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய தேங்காய் இல்லாவிட்டாலும், தேங்காய் ஏற்றுமதி மூலம் பெரும் இலாபத்தை ஈட்ட ஒரு தரப்பினர் செயற்படுவதாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.

எனவே அரசாங்கம் உடனடியாக இந்தப் பிரச்சினையில் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்றும் அவர் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அத்துடன், தேங்காய் பற்றாக்குறைக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் வரை தேங்காய் ஏற்றுமதியை தற்காலிகமாக நிறுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

2019 மற்றும் 2020ஆம் ஆண்டுக்கிடையில் ஏற்பட்ட உர நெருக்கடி காரணமாக தென்னை செய்கையில் ஈடுபட்டவர்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

அதனையடுத்து 2020 – 2021ஆம் ஆண்டுக்கிடையில் வெண்ணிற ஈ தாக்கத்தினால் தென்னை பயிர்ச்செய்கை மீண்டும் பாதிப்பை எதிர்நோக்கியது.

இது போன்ற பிரச்சினைகளே தென்னை விளைச்சல் வேகமாக குறைவதற்கு காரணமாக இருந்தன என்று சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## ஊழலுக்கு எதிராக முழு அமைப்பையும் மாற்றுவேன்

### ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க உறுதி



கொழும்பு, டிச 10

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான ஆணையின்படி, தனது நிர்வாகத்தின் முழு அமைப்பையும் மாற்றி இலங்கையை ஆரோக்கியமான நாடாக மாற்றுவேன் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்துள்ளார்.

சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தின் தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.


சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய நிகழ்வு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

இதன்படி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் ஜனாதிபதியினால் சில நியமனங்களும் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி, 2021ஆம் ஆண்டு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் 69 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 40 வழக்குகள் மீள பெறப்பட்டுள்ளதாகவும், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு 2022ஆம் ஆண்டு 89 வழக்குகளை தாக்கல் செய்து 45 வழக்குகளை மீளப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்படி, இந்த வழக்குகள் வாபஸ் பெறப்படுவதற்கான காரணங்களை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்றும், விசாரணை அதிகாரிகள் வழக்குகளில் சாட்சிகளாக இருக்கக் கூடாது என்பதற்கான காரணங்களை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார். (ஐ)

## சுற்றுலா பயணிகளிடம் நகை கொள்ளை: ஒருவர் கைது



மட்டக்களப்பு டிச 10

மட்டக்களப்பு காத்தான்குடியில் உள்நாட்டு சுற்றுலா பயணிகளிடம் நகைகள் மற்றும் பணம் என்பவற்றை கொள்ளையிட்ட நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காலி ஜின்தோட்டையைச் சேர்ந்த 30 பேர் கொண்ட சுற்றுலா குழுவினர் காத்தான்குடி சுற்றுலா விடுதி ஒன்றில் தங்கியிருந்துள்ளனர்.

இதன்போது, குறித்த சுற்றுலா விடுதியின் மதில் மேலால் உள்ளே நுழைந்து சுற்றுலாப் பயணிகளின் கைப்பையிலிருந்த பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்ட நபர் ஒருவரை கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் இருவரிடமிருந்து 42,500 ரூபா பணத்தையும் மேலும் சிலரிடமிருந்து நகைகளையும் கொள்ளை இட்டவுடன் நகைகளை வாழைச்சேனையிலுள்ள நகைக்கடை ஒன்றில் விற்பனை செய்துள்ளார்.

அத்துடன், விற்பனை செய்த பணம் மற்றும் கொள்ளையிட்ட பணம் ஆகியவற்றிற்கு சந்தேகநபர் ஐஸ் போதைப்பொருளை வாங்கி பாவித்துள்ளமை தெரியவந்துள்ளது. மீதமாயிருந்த இரு தங்க நகைகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்நிலையில், 43 வயதுடைய போதைப் பொருள் பாவனைக்கு அடிமையான நபரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதுடன் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# எவ்வளவு காலம் இலவசங்களை கொடுக்க முடியும்?

## கேள்வி எழுப்பிய சுப்ரீம் கோர்ட்



கொரோனா பெருந்தொற்றின்போது புலம்பெயர் தொழிலாளர்கள் அனுபவித்த இடர்கள் மற்றும் அவர்களுக்கான நிவாரணம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டு தானாக முன்வந்து வழக்காக பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது. இந்த வழக்கில் பல்வேறு உத்தரவுகளை ஏற்கனவே சுப்ரீம் கோர்ட்டு வழங்கிய நிலையில், நேற்று மீண்டும் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. நீதிபதிகள் சூர்ய கந்த் மற்றும் மன்மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வு வழக்கை விசாரித்தது.

இதில் மத்திய அரசு சார்பில் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஐஸ்வர்யா பாட்டி ஆகியோர் ஆஜராகினர். ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்பில் மூத்த வக்கீல் பிரசாந்த் பூஷன் ஆஜரானார். விசாரணையின்போது நீதிபதிகள் சரமாரியாக கேள்விகளை எழுப்பினர்.

அந்தவகையில் கொரோனா பாதிப்பை தொடர்ந்து 81 கோடி மக்களுக்கு இலவசமாக அல்லது மானிய விலையில் ரேஷன் வழங்கப்பட்டு வருவதாக மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து நீதிபதிகள், 'அப்படியென்றால் வரி செலுத்துவோர் மட்டும்தான் விடுபட்டு இருக்கிறார்கள்' என சொலிசிட்டர் ஜெனரல், கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலைப்பார்த்து தெரிவித்தனர்.

அதேநேரம் வக்கீல் பிரசாந்த் பூஷன் தனது வாதத்தில், 'ரேஷன் கார்டு இல்லையென்றாலும் இன்ஸ்டாகிராம் தளத்தில் பதிவு செய்த அனைத்து புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் இலவச மானியம் வழங்க உத்தரவிட வேண்டும்' என கேட்டுக்கொண்டார்.

உடனே நீதிபதிகள், 'எவ்வளவு காலம்தான் இலவசங்களை கொடுக்க முடியும்?, புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் மற்றும் திறன் மேம்பாட்டுக்கு நாம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?' என கேள்வி எழுப்பினர். இதன்போது பிரசாந்த் பூஷன், 'புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மத்திய அரசு வழங்கும் இலவச ரேஷனைப் பெறுவதற்கு ரேஷன் கார்டுகளை வழங்குமாறு அனைத்து மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் இந்த கோர்ட்டு அவ்வப்போது உத்தரவு பிறப்பித்துள்ளது' என தெரிவித்தார்.

இவ்வாறு விவாதம் நீண்ட நிலையில், புலம் பெயர் தொழிலாளர் பிரச்சினை குறித்த இந்த வழக்கில் விரிவான விசாரணை தேவை எனக்கூறிய நீதிபதிகள், வழக்கின் அடுத்த விசாரணையை ஜனவரி 8-ந்தேதிக்கு ஒத்திவைத்தனர்.

## வீடுகள் எரிப்பு, ஆக்கிரமிப்பு பற்றிய தகவல்களை அளியுங்கள்

### மணிப்பூர் அரசுக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவு

வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் பா.ஜ.க ஆட்சி நடைபெற்று வருகின்றது. அங்கு பெரும்பான்மையாக வாழும் மெய்தி இனத்தினர் தங்களுக்கு பழங்குடியினர் அந்தஸ்து கோரி வந்தனர். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த ஆண்டு மே மாதம், மணிப்பூரில் உள்ள மலை மாவட்டங்களில் பழங்குடியினர் ஆதரவு பேரணி நடந்தது. அப்போது, மெய்தி இனத்தினருக்கும், பழங்குடியினருக்கும் இடையே கலவரம் வெடித்தது.

மாதக்கணக்கில் நீடித்த கலவரத்தில் 200-க்கு மேற்பட்டோர் பலியானார்கள். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை விட்டு வெளியேறி நிவாரண முகாம்களில் தங்கினர். எண்ணற்ற வீடுகள் எரிக்கப்பட்டன. கடைகள் உள்ளிட்ட கட்டிடங்கள் சேதப்படுத்தப்பட்டன. இன்னும் அவ்வப்போது வன்முறை சம்பவங்கள் நடந்து வருகின்றன.

இதற்கிடையே, மணிப்பூர் கலவரம் தொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் நிலுவையில் உள்ளது. கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் இந்த வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மீட்பு மற்றும் நிவாரண பணிகளை மேற்பார்வையிட ஓய்வுபெற்ற 3 பெண் நீதிபதிகளை கொண்ட குழு அமைக்குமாறு உத்தரவிட்டது.

இந்நிலையில், சுப்ரீம் கோர்ட்டில் நேற்று இவ்வழக்கு தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, நீதிபதி சஞ்சய் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தது.

மணிப்பூர் இனக்கலவரத்தின்போது, முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ எரிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட சொத்துகள் பற்றிய விவரங்களை மூடி முத்திரையிட்ட உறையில் வைத்து தாக்கல் செய்யுமாறு மணிப்பூர் மாநில அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதனைத்தொடர்ந்து, கலவரக்காரர்கள் மற்றும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களையும் தெரிவிக்குமாறு மாநில அரசுக்கு உத்தரவிட்டனர். அடுத்தகட்ட விசாரணையை ஜனவரி 20-ந்தேதி தொடங்கும் வாரத்துக்கு ஒத்திவைத்தனர்.

## எஸ்.எம். கிருஷ்ணா மறைவுக்கு இரங்கல் தெரிவித்த பிரதமர் மோடி!



கர்நாடகா மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா இன்று அதிகாலை உயிரிழந்தார். இவரது மறைவை ஒட்டி அரசியல் தலைவர்கள், பொது மக்கள் மற்றும் பலர் வருத்தம் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி, எஸ்.எம். கிருஷ்ணா மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது, "எஸ்.எம். கிருஷ்ணா அனைத்து தரப்பு மக்களாலும் போற்றப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க தலைவர். மற்றவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த அவர் எப்போதும் அயராது உழைத்தார். கர்நாடகாவின் முதலமைச்சராக இருந்ததற்காக, குறிப்பாக உள்கட்டமைப்பு மேம்பாட்டில் அவர் கவனம் செலுத்தியதற்காக அவர் அன்புடன் நினைவு கூறப்படுகிறார். எஸ்.எம்.கிருஷ்ணா ஒரு சிறந்த வாசகர் மற்றும் சிந்தனையாளர்." "பல ஆண்டுகளாக ஸ்ரீ எஸ்.எம். கிருஷ்ணா ஜியுடன் தொடர்பு கொண்டு உரையாட எனக்கு பல வாய்ப்புகள் கிடைத்துள்ளன. அந்த உரையாடல்களை நான் எப்போதும் போற்றுவேன். அவரது மறைவால் நான் மிகுந்த வருத் தம் அடைகிறேன். அவரது குடும்பத்தினருக்கும் அவரை பின்தொடர் வோருக்கும் எனது அனுதாபங்கள். ஓம் சாந்தி," என்று குறிப்பிட்டுள்ளார்.

## மோடி–அதானி படம் பொறித்த பைகளுடன் வெடித்த காங்கிரஸ் போராட்டம்!

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த 25-ந்தேதி தொடங்கியது. முதல் நாளில் இருந்தே எதிர்க்கட்சிகளின் சர்ச்சையால் இரு அவைகளும் முடங்கியது.

அதானி குழும விவகாரம், உ.பி. கலவரம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதிக்க எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகிறார்கள். இதற்கு அனுமதி மறுக்கப்படுவதால் தொடர்ந்து விவாதத்தில் ஈடுபட்டனர்.

மேலும் பாராளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம், பேரணி ஆகியவற்றை நடத்தினர்.

இந்த நிலையில் இன்று காலை 11 மணிக்கு பாராளுமன்றம் கூடியது. மக்களவை கூடியதும் சபாநாயகர் ஓம் பிர்லா பேசும்போது, சபைக்கு அதன் சொந்த மரியாதை, உயர்தரம், கண்ணியம் உள்ளது. அவற்றை யாரும் தாழ்த்த முயற்சிக்க வேண்டாம். நாம் அனைவரும் சபையின் கண்ணியத்தைக் காக்க வேண்டும்.

ஆனால் சில நாட்களாக சில விஷயங்கள் நடந்ததை நான் கண்டேன். இந்த சம்பவங்களில் மூத்த தலைவர்கள் கூட பங்கேற்றது கவனிக்கத்தக்கது, இது நல்லதல்ல என்றார்.

இதனைத்தொடர்ந்து கேள்வி நேரத்தை பிர்லா தொடங்கினார். அப்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் பிரச்சனைகளை எழுப்ப முற்பட்டனர்.

அவர்களிடம் சபாநாயகர் சபையை சாதாரணமாக செயல்பட அனுமதிக்க வேண்டும் என்று கூறினார்.

ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சனைகள் குறித்து விவாதிக்க கோரி கேள்விகளை எழுப்பினர். இதனால் சபையில் தொடர்ந்து அமைதியின்மை நிலவியதால் மக்களவை மதியம் 12 மணி வரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

இதேவேளை மேல்-சபை இன்று கூடியதும் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பினர். இரு தரப்பு எம். பி.க்களும் கோஷங்களை எழுப்பியதால் கூச்சல்-குழப்பம் நிலவியது. இதனால் மேல்-சபையை மதியம் 12 மணி வரை ஒத்தி வைப்பதாக அவைத்தலைவர் ஜெகதீப் தங்கர் தெரிவித்தார்.

மதுரை மாவட்டம் மேலூரில் டங்ஸ்டன் சுரங்க அனுமதியை இரத்து செய்யக்கோரும் தீர்மானம் தமிழக சட்டசபையில் நேற்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில் டங்ஸ்டன் விவகாரம் தொடர்பாக குறித்து பாராளுமன்றத்தை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று மக்களவையில் தி.மு.க. பாராளுமன்றக் குழு தலைவர் கனிமொழி அறிவிப்பை வழங்கினார்.

இதே கோரிக்கையை வலியுறுத்தி காங்கிரஸ் கொறடா மாணிக்கம் தாக்கூரும் தமது அறிவிப்பை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக இன்று காலை பாராளுமன்றத்தின் பிரதான குழு அறையில் காங்கிரஸ் கட்சியின் மக்களவை எம்.பி.க்கள் கூட்டம், மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி தலைமையில் நடந்தது.

இதில் பிரியங்கா காந்தி உட்பட எம். பிக்கள் பங்கேற்றனர். கூட்டம் முடிந்த பின்னர் காங்கிரஸ் எம்.பிக்கள் பாராளுமன்ற வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதமர் மோடி, அதானி ஒன்றாக இருக்கும் புகைப்படம் பொறித்த பையை ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி உள்பட அனைத்து காங்கிரஸ் எம்.பிக்களும் அணிந்து நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் இந்தியா கூட்டணி கட்சிகளை சேர்ந்த எம்.பிக்களும் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் அதானி விவகாரம் தொடர்பாக அரசுக்கு எதிராகவும், இந்த விவகாரத்தில் நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கேள்விக்களை எழுப்பினர்.

இதற்கிடையே பாராளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜ்ஜு தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் கூறும்போது, சமாஜ்வாடி கட்சி, திரிணாமுல் காங்கிரஸ், மாநிலங்களவையில் உள்ள அனைத்து காங்கிரஸ் எம்.பி.க்களும், மக்களவையில் உள்ள சில காங்கிரஸ் எம்.பி.க்கள் மற்றும் பல கட்சி எம்.பி.க்களும் பாராளுமன்ற விவாதத்தில் பங்கேற்க ஆர்வமாக உள்ளனர்.

ராகுல் காந்திக்கு இழப்பதற்கு ஒன்றுமில்லை. ஏனென்றால் மக்களின் வலி மற்றும் பிரச்சனைகளை அவரால் உணர முடியவில்லை. ஆனால் அதை மற்ற எம்.பி.க்கள் உணருகிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.

## ஜெகதீப் தன்கரை பதவி நீக்க இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் திட்டம்!



துணை ஜனாதிபதியான ஜெகதீப் தன்கர் பாராளுமன்ற மேல்சபையின் தலைவராக இருக்கிறார். அவருக்கும் எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கும் இடையே அவையில் மோதல் ஏற்பட்ட நிலையில் ஒருதலைபட்சமாக செயல்படுவதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இதனையடுத்து ஜெகதீப் தன்கரை பதவி நீக்கம் செய்ய அறிவிப்பு அளிப்பது என்று இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் முடிவு செய்துள்ளனர்.

சட்டப்பிரிவு 67ன்படி இந்த அறிவிப்பு சமர்பிக்கப்படும் என்றும், காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், தி.மு.க., சமாஜ்வாடி, இடதுசாரி கட்சிகள் உள்பட 50-க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் அறிவிப்பில் கையெழுத்திட ஒப்புக்கொண்டு உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளன.

# வாடகைத் தாய் வணிகம்



## மார்க்சியப் பார்வையில் ஓர் அலசல்



பண்டைய காலத்தில், முதலாளிகள் தங்களது நிலத்தில் விவசாயம் செய்யப் பண்ணை அடிமைகளைப் பயன்படுத்தினார்கள். வேலை முடிந்ததும் ஆடு, மாடு போல் சங்கிலியால் பண்ணை அடிமைகளைக் கட்டிப் போட்டனர். வேலை நேரம் உட்பட அனைத்து நேரமும் விலங்குகள் போல் பண்ணை அடிமைகள் கருதப்பட்டனர். தூங்கும் நேரத்தில் கூட முதலாளிகளின் கட்டுப்பாட்டில் தான் இருந்தனர். அவர்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை. ஏனெனில் பண்ணை அடிமைகள் அக்கால கட்டத்தில் முழுமனிதர்களாக கருதப்படவில்லை.

அக்கால கட்டத்தில் இரு பழங்குடி இனங்களுக்கு இடையே நடக்கும் போரில் வென்றவர்கள், தோல்வியுற்ற பழங்குடி குழுக்களைச்சார்ந்த ஆண்களைக்கொன்று விடுவர். மீதமுள்ள ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும் அடிமைகளாக மாற்றிவிடுவர். தோற்றவர்களிடம் அடிமைகளாக இருந்தவர்கள் போரில் வென்றவர்களுக்கு அடிமைகளாக கையளிக்கப் பட்டனர். அதாவது எஜமானார் மாற்றம் மட்டுமே. உரிமை மாற்றம் அடிமைகளுக்கு எதுவும் கிடையாது. ஐரோப்பிய நாடுகள் ஏனைய ஆசிய, ஆப்ரிக்க நாடுகளை காலனிகளாக ஆண்ட காலத்தில், காலனி நாடுகளைச் சேர்ந்தோர் அடிமைகளாக கப்பல்களில் ஏற்றிச் செல்லப்பட்டு ஏகாதிபத்திய நாடுகளின் விவசாய நிலங்களிலும் தோட்டங்களிலும் தொழிற்சாலைகளிலும் கொத தடிமைகளாக வேலைசெய்தனர்.

அதற்குப் பிந்தைய முத லாளித்துவ உலகில் கூலித் தொழிலாளிக்கு கொஞ்சம் சுதந்திரம் கிடைத்தது. விரும்பினால் சம்பளம் வாங்கிக் கொண்டு ஒரு முதலாளியிடம் வேலை செய்யலாம். குறிப்பிட்ட நேர உழைப்பு முடிந்த பின்னர் முதலாளியிடம் இருந்து பிரிந்து வந்து விடலாம். சம்பளம், வேலையிடம், வேலை நேரம், முதலாளியின் நடத்தை உட்பட பல காரணங்களுக்காக வேலையை விட்டு நின்று விடலாம். வேலை செய்ய விருப்பம் இல்லையென்றாலும், வேலை செய்ய முடியாமல் போனாலும் வேறு வேலைக்கு மாறிக் கொள்ள கூலித் தொழிலாளிக்கு உரிமை உண்டு.

வாடகைத் தாய் (surrogacy) முறையோ பெண்களை அடிமை காலகட்டத்திற்குத் தள்ளுகிறது. ஏனெனில், பெண் என்பவள் வியாபாரத்திற்காக பொருளை (குழந்தையை) உற்பத்தி

> "வாடகைத் தாயாக மாற வேண்டும் என்ற சுதந்திர உணர்வு கொண்ட ஒரு பெண்ணைக் கூட இவ்வுலகில் காண முடியாது. உயர் வர்க்கப் பெண்கள் எவரும் வாடகைத் தாயாக மாற சம்மதிக்க மாட்டார்கள் என்பதில் இருந்து வாடகைத் தாய் முறையின் கொடூரத்தைப் புரிந்து கொள்ளலாம்."



செய்யும் இயந்திரமும் அல்ல. வாடகைத் தாய்க்கும் குழந்தைக்கும் இடையே உள்ள உறவு ஒரு பொருளை உற்பத்தி செய்யும் தயாரிப்பாளருக்கும், உற்பத்தி செய்யப்படும் பொருளுக்கும் இடையிலான உறவைப் போன்றதும் அல்ல. இருப்பினும், வாடகைத் தாய் முறையில், "வாடகைத் தாய்" தன் வயிற்றை மட்டும் வாடகைக்கு விட வில்லை, மாறாக தன்னையும் தன் வயிற்றில் வளரும் குழந்தையையும் விற்கிறாள். வாடகைத் தாயாக மாற முடிவெடுக்கும் போதும் அவள் சுதந்திரமானவளாக முடிவெடுப்பதில்லை. வாடகைத் தாயாக மாறிய பின்னரும் அவள் சுதந்திரமானவளாக முடிவெடுக்க இயலாது. அவளுடைய கர்ப்பமும் அவளுக்குச் சொந்தமில்லை.

வாடகைத் தாயின் வயிற்றில் குழந்தை வளரும் காலகட்டத்தில், அவள் என்ன செய்கிறாள், அவள் என்ன சாப்பிடுகிறார், அவள் எப்போது தூங்குகிறார் என 24 மணி நேரமும் கண்காணிக்கப் படுகிறாள். வாடகைத்தாயை பணியமர்த்துபவர்களிடம் முழுமையாக தன்னை ஒப்படைக்கிறாள். குழந்தையை பெற்றெடுக்கும் இந்த முறையில், வாடகைத்தாய் 'பினாமி போன்ற' ஒரு உரிமையற்ற பாத்திரத்தை ஏற்றுக் கொள்கிற கட்டாயத்திற்கு உட்படுத்தப்படுகிறாள். குறை பிரசவத்தில் பிறக்கும் குழந்தையை குறிப்பிட்ட காலத்திற்கு பாதுகாக்கும் ஒரு இன்குபேட்டர் போல தனது கருவறையில் வைத்திருந்து பெற்றெடுத்துத் தருகிறாள்.

கர்ப்ப காலத்திலும், மகப்பேறு காலத்திலும் வாடகைத் தாயாக மாறியவளுக்கு எவ்வித உடல் வலியோ, உளவியல் சிக்கலோ இருந்தாலும், பிள்ளையை பெற்றுக்கொடுக்க வேண்டிய கடமை இருக்கிறது. அதே வேளையில் பெற்றெடுத்த பிள்ளையை உரிமை கோரவும் முடியாது. வாடகைத் தாயாக மாற ஒப்புக் கொண்ட நொடியில் இருந்து, அவளால் எதையும் சுதந்திரமாகச் செய்ய முடியாது. அவள் விரும்பினாலும், மருத்து வரும் (வாடகைத் தாயின் எஜமானர்களும்) ஒப்புக் கொள்ளாதவரை அவளால் கருக்கலைப்புக் கூட செய்ய முடியாது. அவள் விருப்பத்திற்கு மாறாக சிசேரியன் முறைக்கு கட்டாயப்படுத்தப்படலாம். அதாவது தன் சொந்த உடலையோ, தன் உடலில் உள்ள கர்ப்பத்தையோ சொந்தம் கொண்டாட முடியாத வகையில் பிரிந்தெடுக்கபபடுகிறாள். பண்ணை அடிமைகள் எப்படி தன் உடலை சொந்தம் கொண்டாட முடியாமல் இருந்தார்களோ, அதே நிலைக்கு வாடகைத் தாயும் தள்ளப் படுகிறாள்.

வாடகைத் தாயாக மாற அவள் முடிவெடுப்பதும் அன்பின் காரணமாகவோ, சுதந்திரமாகவோ இருக்காது. வயிற்றை விற்றாவது உயிர் வாழ வேண்டிய நிலையில் உள்ள பெண்கள் மட்டுமே வாடகைத் தாயாக இருப்பதற்கு ஒப்புக் கொள்வார்கள்.

அதாவது மோசமான சமூகப் பொருளாதார சூழ்நிலையே வாடகைத் தாய்மார்களை உருவாக்குகிறது. இன்னொரு பெண்ணிற்கு குழந்தை பெற்றுத் தந்தால், அந்தப் பெண் மகிழ்ச்சியாக இருப்பாள், அவளுக்கு நாம் உதவுவோம் என்ற சுதந்திரச் சிந்தனையின் காரணமாக எந்தப் பெண்ணும் வாடகைத் தாயாக இருப்பதற்கு ஒப்புக் கொள்ள மாட்டாள்.

ஒருவருடைய வாழ்நிலையே அவளுக்கு வாடகைத் தாயாக மாறும் உணர்வை கொடுக்கிறது. மாறாக வாடகைத் தாயாக மாற வேண்டும் என்ற சுதந்திர உணர்வு கொண்ட ஒரு பெண்ணைக்கூட இவ்வுலகில் காண முடியாது. உயர் வர்க்கப் பெண்கள் எவரும் வாடகைத் தாயாக மாற சம்மதிக்க மாட்டார்கள் என்பதில் இருந்து வாடகைத் தாய் முறையின் கொடூரத்தைப் புரிந்து கொள்ளலாம்.

உண்பது, தூங்குவது, உடலுறவு கொள்வது போன்றவை மனிதர்களுக்கும் விலங்களுக்கும் பொதுவானவைகளாக இருந்தாலும், மனிதர்களை விலங்குகளிடம் இருந்து பிரிப்பது உழைப்பு மட்டுமே. ஆனால், முதலாளித்துவ சமூகம் உழைப்பை மனிதர்களிடம் இருந்து அந்நியப்படுத்தி வைத்துள்ளது. முதலாளித்துவ சமூகத்தில் யாரும் விரும்பி உழைப்பதில்லை. உயிர் வாழ்வதற்கு வேறு வழியின்றி உழைக்கிறார்கள். ஆனால் விலங்குக்கு மட்டுமே உரிய பண்புகளான "உண்பது, தூங்குவது, உடலுறவு கொள்வது" போன்றவற்றை மேற்கொள்ளும் போது மட்டுமே மகிழ்ச்சியாக இருக்கும்படி முதலாளித்துவ சமுகம் மனிதனை மாற்றி வைத்துள்ளது என்பார் மார்க்ஸ். வாடகைத் தாய் முறையோ பெண்ணை முழு நேரமும் விலங்காகவே இருக்க கட்டாயப்படுத்துகிறது. கோழிப் பண்ணையில் முட்டைக்காகவும், கறிக்காகவும் வளர்க்கப்படும் பண்ணைக் கோழியின் நிலைக்கு ஒப்பானது வாடகைத் தாயின் நிலை.

வாடகைத்தாய் முறை என்பது குழந்தை பெற்றுத் தர வாய்ப்புள்ள ஒரு பெண், குழந்தை பெற இயலாத இன்னொரு பெண்ணுக்கு குழந்தை பெற்றுத் தர உதவும் முறை அல்ல. அது பெண்ணை தன் உடலின் மீது உரிமை கோர இயலாத அடிமை முறைக்குள் தள்ளும் கொடூரம்.

முதலாளித்துவ சமுகத்தில் பல்வேறு அறிவியல் சாதனைகள் நிகழ்த்தப்பட்டிருப்பினும், அவை தனியாருக்கு இலாபத்தை ஈட்டித் தரும் சேவையாகவே இருந்து வருகிறது என்பதை நம் அனுபவத்தில் பார்த்து வருகிறோம். வாடகைத் தாய் முறை அறிவியல் வளர்ச்சியின் வெளிப்பாடாக இருந்தாலும், அதனை அனுபவித்துப் பார்த்த பின்னர் தான், அதன் நல்லது கெட்டதைப் புரிந்து கொள்ள இயலும் என்ற போதாமை இன்று இல்லை. வாடகைத் தாய் முறை அதன் அடிப்படையிலே சுரண்டல் தன்மையோடு தான் உள்ளது என்பதை விளக்க நமக்கு மார்க்ஸ் தேவைப் படமாட்டார். சக மனித உயிர்கள் மீது அன்பிருந்தால் போதும்.

# இராணுவ தளங்களை குறிவைத்து சிரியா மீது இஸ்ரேல் குண்டுவீச்சு!



சிரியாவில் அதிபராக இருந்த பஷார் அல்-அசாத்தின் அரசாங்க படைகளுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் குழு அதிரடி தாக்குதல் நடத்தியது.

இதில் தலைநகர் டமாஸ்கஸ் உள்பட முக்கிய நகரங்களை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியதையடுத்து அசாத்தின் ஆட்சி கவிழ்ந்தது. இதையடுத்து நாட்டைவிட்டு தப்பி சென்ற அசாத் ரஷ்யாவில் தஞ்சம் அடைந்துள்ளார்.

இதற்கிடையே சிரியாவில் அதிபர் அசாத் அரசு கவிழ்ந்ததை இஸ்ரேல் வரவேற்று உள்ளது. அதேவேளையில் தங்கள் நாட்டின் பாதுகாப்புக்காக சிரியா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

சிரியாவில் உள்ள இரசாயன ஆயுதங்கள், ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதங்கள் கிளர்ச்சியாளர்களிடம் கிடைத்தால் இஸ்ரேலுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று கருதி சிரியாவின் இராணுவ தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

100-க்கும் மேற்பட்ட இராணுவ இலக்குகள் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டுகளை வீசியது. அசாத் ஆட்சியின் ராணுவ திறன்களை அழிக்க இஸ்ரேல் தனது தாக்குதல்களை அதிகரித்துள்ளது.

இதன்மூலம் ராணுவ ஆயுதங்களை கிளர்ச்சியாளர்கள் பயன்படுத்துவதை தடுக்க முடியும் என்று இஸ்ரேல் கருதுகிறது.

குறித்த தாக்குதலில் பார்சா அறிவியல் ஆய்வு மையம் உள்பட பல இடங்களில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக, மனித உரிமைகளுக்கான சிரியா கண்காணிப்பு அமைப்பின் தலைவர் ரமி அப்தெல் ரஹ்மான் தெரிவித்தார்.

இதற்கிடையே சிரியாவில் அசாத் ஆட்சி கவிழ்ந்த பிறகு அங்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து உறுதியான தகவல் வெளியாகவில்லை. அதிகார மாற்றம் தொடர்பாக சிரியா பிரதமரை கிளர்ச்சியாளர்கள் குழு தலைவர் சந்தித்து ஆலோசனை நடத்தியதாக தகவல் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காஸாவில் போரை நிறுத்தப் போவதில்லை

### இஸ்ரேல் பிரதமர் தெரிவிப்பு



இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் நிறுத்தம் தொடர்பான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், காசவில் தற்போதைக்கு போரை நிறுத்தப் போவதில்லை என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு தெரிவித்தார்.

போர் தொடங்கி கிட்டத்தட்ட 14 மாதங்கள் நிறைவுற்ற நிலையில், செய்தியாளர்களை சந்தித்த பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு, "நாங்கள் இப்போது போரை நிறுத்தினால், ஹமாஸ் மீண்டும் வந்து தாக்கலாம் - இது நடப்பதை நாங்கள் விரும்பவில்லை," என்று கூறினார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்திருப்பவதாவது எதிர்காலத்தில் மீண்டும் தாக்குதல்கள் நடைபெறாமல் இருக்க "ஹமாஸ்-ஐ அழித்தொழித்தல், அதன் இராணுவ மற்றும் நிர்வாகத் திறன்களை ஒழித்தல்" என்ற இலக்கை நிர்ணயித்து இருப்பதாக நேதன்யாகு மீண்டும் கூறினார். எனினும், இந்த இலக்கை நாங்கள் இன்னும் முழுமையாக அடையவில்லை என்று கூறினார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் ஆண்டனி பிளிங்கன் கடந்த அக்டோபர் 23-ந்தேதி கூறும் போது, "இஸ்ரேல் ஹமாஸ்-இன் ராணுவத் திறனை சிதைக்க முடிந்தது. அதன் தலைமையை அடுத்தடுத்து கொன்று குவித்தது.

அந்த வெற்றிகளுடன், பணயக்கைதிகளை வீட்டிற்கு அழைத்துச் சென்று, அடுத்து என்ன நடக்கும் என்பதைப் புரிந்துகொண்டு போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நேரம் இது" என்று தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

## இந்திய வம்சாவளி பெண்ணுக்கு முக்கிய புதவி

### அமெரிக்க நீதித் துறையில் மாற்றம்!





அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ட்ரம்ப் வருகின்ற ஜனவரி 20-ந்தேதி பதவியேற்கிறார். அவர் தனது ஆட்சி நிர்வாகத்தில் அங்கம் வகிப்பவர்களை நியமித்து வருகிறார்.

இந்த நிலையில் அமெரிக்க நீதித்துறையின் சிவில் உரிமைகளுக்கான உதவி அட்டர்னி ஜெனரலாக இந்திய வம்சாவளியை சேர்ந்த பெண் வக்கீலான ஹர்மீத் கே தில்லானை நியமிப்பதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ட்ரம்ப் தனது ட்ஷரூத் சமூகவலைதள பதிவில் , அமெரிக்க நீதித்துறையில் சிவில் உரிமைகளுக்கான உதவி அட்டர்னி ஜெனரலாக ஹர்மீத் கே. தில்லானை பரிந்துரைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

அவர் தனது வாழ்க்கை முழுவதும், நாட்டின் சிவில் உரிமைகளைப் பாதுகாக்க தொடர்ந்து நிலைத்து நிற்கிறார். ஹர்மீத் நாட்டின் முன்னணி தேர்தல் வழக்கறிஞர்களில் ஒருவர். ஹர்மீத் நமது அரசியலமைப்பு உரிமைகளின் அயராத பாதுகாவலராக இருப்பார்.

குடிமை உரிமைகள் மற்றும் தேர்தல் சட்டங்களை நேர்மையாகவும் உறுதியாகவும் செயல்படுத்துவார் என்று தெரிவித்தார்.

ட்ரம்பின் புதிய அமைச்சரவையில் பரிந்துரைக்கப்பட்ட 4-வது இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் ஹர்மீத் தில்லான் ஆவார்.

## உக்ரைன்– ரஷ்யா இடையே போர் நிறுத்தம் பேச்சுவார்த்தைக்கு தயாராகும் டிரம்ப்!

உக்ரைன்- ரஷ்யா இடையிலான போர் ஆயிரம் நாட்களை கடந்துள்ளது. ரஷ்யாவுக்கு உக்ரைனால் ஈடுகொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகள் ஆயுத உதவி வழங்கியதால் உக்ரைன் ரஷ்யாவுக்கு எதிரான போரில் ஈடுபட்டு வருகிறது.

அமெரிக்க அதிபர் தேர்தல் டொனால்டு டிரம்ப் வெற்றி பெற்றதைத்தொடர்ந்து தனது வெற்றி உரையில் நாங்கள் போரை விரும்பவில்லை எனக் கூறியிருந்தார். இதனால் உக்ரைன்-ரஷ்யா இடையிலான போர் முடிவடைய வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது.

இந்த நிலையில் உக்ரைன்-ரஷ்யா இடையிலான போர் உடனடியாக நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தை தொடங்கப்பட வேண்டும் என டொனால்டு டிரம்ப் விரும்புகிறார்.

இது தொடர்பாக டொனால்டு டிரம்ப் கூறுகையில் "உக்ரைன்- ரஷ்யா இடையில் உடனடியாக போர் நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தை தொடங்கப்பட வேண்டும். தேவையில்லாமல் ஏராளமான உயிர்கள் வீணாகி வருகிறது. ஏராளமான குடும்பங்கள் சீரழிந்துள்ளது. இது இப்படியே சென்று கொணடிருந்தால் மிகவும் பெரியதாகி மோசமானதாகிவிடும். ரஷ்ய அதிபர் புதினுக்கு இது நன்றாக தெரியும். அவர் செயற்பட வேண்டிய நேரம் இது. சீனா உதவி செய்ய முடியும். உலகம் காத்துக் கொண்டிருக்கிறது.

4 லட்சம் ராணுவ வீரர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் உக்ரைன்நாட்டின்போரை முடிவுக்கு கொண்டு வரும் ஒப்பந்தத்தை அந்நாட்டு அதிபர் ஜெலன்ஸ்கி எதிர்பார்த்து கொண்டிருக்கிறார். ஜெலென்ஸ்கியும் உக்ரைனும் ஒரு ஒப்பந்தம் செய்து பைத்தியககாரத்தனத்தை நிறுத்த விரும்புகிறார்கள். அவர்கள் 4,00,000 வீரர்களையும் (உயிரிழப்பு மற்றும் காயம்) இன்னும் பல பொதுமக்களையும் இழந்துள்ளனர்.

புதுப்பிக்கப்பட்ட நாட்டர்டாம் தேவாலயம் திறப்பு விழாவின்போது டொனால்டு டிரம்ப் உடன் ஜெலன்ஸ்கி பேசினார். அதனைத் தொடர்ந்து டிரம்ப் மேற்கண்டவாறு சமூக வலைத்தளத்தில் குறிப்பிட்டிருந்தார். மேலும், நேட்டோ அமைப்பில் உள்ள உறுப்பு நாடுகள் பாதுகாப்பு செலவிற்கான பணத்தை முறையான விகிதத்தில் வழங்கவில்லை என்றால் நேட்டோவில் இருந்து வெளியேறுவது குறித்து பரிசீலனை செய்யப்படும் எனத் தெரிவித்தார்.



## தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்திய காரியாலயம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டது.

இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தில், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே சங்கத்தின் தலைவி செபஸ்டியன் தேவி இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், "கடந்த 15 வருட காலமாக ஏமாற்றப்பட்டு வருகிறோம். இந்த மனித உரிமைகள் தினம் எதற்கு? இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரும் புலனாய்வாளர்களால் அச்சுறுத்தப்பட்டு வருகிறோம். ஏன் இதனை செய்கிறார்கள்? சர்வதேச நீதிப் பொறி முறை தான் எமக்கு தேவை. உள்நாட்டு பொறிமுறை என்பது வெறும் கண்துடைப்பு. எனவே, தீர்வினை பெற்றுத் தரும் வரைக்கும் எங்கள் போராட்டம் தொடரும்" என்றார்.

இந்தப் போராட்டத்தின் போது, "உங்கள் இராணுவத்தை நம்பி ஒப்படைத்த எங்கள் பிள்ளைகள் எப்படி காணாமல் போனார்கள்?", "நாங்கள் உண்மை மற்றும் நீதிக்காக தொடர்ந்தும் போராடுகிறோம்", "நாங்கள் கேட்பது இழப்பீடையோ மரண சான்றிதழையோ அல்ல முறையான நீதி விசாரனையே" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு,

"வேண்டாம் வேண்டாம் ஓஎம்பி வேண்டாம்", "மனித உரிமைகள் இல்லாத நேரத்தில் மனித உரிமைகள் தினம் எதற்கு?" ,"சர்வதேச நீதி வேண்டும்", "வெள்ளைவானில் கடத்திய எங்கள் பிள்ளைகள் எங்கே?" ,"வேலைக்கு சென்ற - பாடசாலை சென்ற எங்கள் பிள்ளைகள் எங்கே?" எனக் கோசமிட்டவாறு கவன ஈர்ப்பில் ஈடுபட்டனர். (ஐ)

## இந்தியா பயணம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவர்களைச் சந்திக்கவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் மற்றும் பிரதி நிதியமைச்சர் ஆகியோரும் இந்த விஜயத்தில் கலந்து கொள்ளவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-05)

## வவுனியாவில....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வவுனியா, கந்தசாமி ஆலயத்திற்கு முன்பாக இன்று ஆரம்பமாகிய குறித்த பேரணி அங்கிருந்து பசார் வீதி வழியாக வந்து பழைய பஸ் நிலையப் பகுதியில் முடிவடைந்தது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தீச்சட்டியை ஏந்தி நீதி கேட்டுப் போராடினார்கள்.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்த அவர்கள்,

"இது அன்னையர் தினமோ, ஆசிரியர் தினமோ எனக் கூறி கடந்து செல்ல முடியாது. இது மனித உரிமைகள் தினம். மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். எம் உயிருக்கும் மேலான வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைக் கேட்டுப் போராடிக் கொண்டிருக்கும் எம்மையும் மதிக்க வேண்டும். மனித உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும்.

ஆனால், இலங்கையில் பல்லாயிரம் உயிர்கள் கொல்லப்பட்டும் பல்லாயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர். இதுவரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிய 300 இற்கும் அதிகமான உறவுகள் உயிரிழந்துள்ளனர். அவர்களின் உறவுகளை இனி யார் தேடுவது?

எப்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நீதி கிடைத்து எம்மைப் போல் அழுபவர்களின் குரல் ஓய்கின்றதோ. அன்றுதான் எமக்கு மனித உரிமைகள் தினம் என வலியுறுத்தி நிற்கின்றோம்." - என்றனர்

# இந்த அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை உண்டு பிரித்தானிய முதனிலைச் செயலரிடம் ஆளுநர் தெரிவிப்பு!



யாழ்ப்பாணம், டச. 10

இந்த அரசாங்கத்தின் காலத்தில் தமது பிரச்சினைகள் தீர்க்கப்படும் எனத் தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பிரித்தானியத் தூதரகத்தின் சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைகளுக்கான முதனிலைச் செயலர் ஹென்றி டொனைட்டிடம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமைகாலை இடம்பெற்ற சந்திப்பின் போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டமைக்கு முதலில் வாழ்த்துக்களைத் தெரிவித்த முதனிலைச் செயலர், வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் அறிவது தனது பயணத்தின் நோக்கம் எனக் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து இன்னமும் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும், குறிப்பாக மக்களின் காணிகள் கடந்த காலங்களில் அவர்கள் இடம்பெயர்ந்திருந்த சந்தர்ப்பங்களில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றின் ஆளுகைக்கு உட்பட்டதாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டமையால் தற்போது சிக்கல் நிலைமைகள் ஏற்பட்டுள்ளது என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

விவசாயிகள் வாழ்வாதாரம் இதனால் கடுமையான பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது என்று குறிப்பிட்ட ஆளுநர், வடக்கு மாகாணத்து மக்களின் முக்கியமான பிரச்சினையாக இது உள்ளது எனவும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட சில வீட்டுத் திட்டங்கள் இடைநடுவில் இருப்பதால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனவும் அவை விரைவில் பூர்த்தியாக்கப்பட வேண்டிய தேவை உள்ளதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

வலி. வடக்கில் பாதுகாப்புத் தரப்பினர் வசம் நீண்ட காலம் இருந்த வீதி மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்டமை சிறந்த நடவடிக்கை எனக் குறிப்பிட்ட ஆளுநர், மக்கள் மேலும் வீதிகளை, காணிகளை விடுவிக்கக் கோருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் பாதுகாப்புத் தரப்பினரால் ஏற்படுத்தப்பட்டிருந்த சோதனைச் சாவடிகள் மற்றும் வீதித் தடைகள் என்பன அகற்றப்பட்டுள்ளன என்பதையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளமையால் அதிகளவில் வருகின்றனர் எனக் குறிப்பிட்ட ஆளுநர் அடுத்த ஆண்டு முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த திட்டமிட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையிலும் இளையோருக்கான வேலைவாய்ப்புக்களை வழங்கும் நோக்கிலும் பலாலியிலுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை விரிவாக்கப்படவுள்ளதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், பொதிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் விரைவில் அதற்கும் சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார். இந்தியாவின் தமிழகத்தில் அண்ணளவாக ஒரு லட்சம் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக உள்ளனர் எனவும் அவர்கள் நாடு திரும்பினால் அவர்களுக்குரிய வாழ்வாதார, வதிவிட உதவிகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தின் பிரதான வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டபோதும் உள்ளக வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை என்று குறிப்பிட்ட ஆளுநர் அவற்றை எதிர்காலத்தில் விரைந்து அபிவிருத்தி செய்ய எதிர்பார்ப்பதாகவும், தற்போதைய அரசாங்கத்தின் காலத்திலேயே அபிவிருத்திகளைச் செய்து முடிக்கலாம் என நம்புவதாகவும் தெரிவித்தார். அதேவேளை, ஐ.நா. முகவர் அமைப்புக்கள் ஊடாக பிரிட்டன் அரசாங்கம் கடந்த காலங்களில் வடக்கு மக்களுக்கு மேற்கொண்ட உதவிகளுக்கு ஆளுநர் நன்றிகளையும் தெரிவித்தார். (ஐ-05)

# அனைவரது உரிமைகளும் பாதுகாக்கப்படும் மனித உரிமைகள் தின செய்தில் பிரதமர்!

கொழும்பு, டிச. 10

அனைத்து மனிதர்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனத் உரிமைகள் தினத்தையொட்டி அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த செய்திக் குறிப்பில் மேலும் அவர் குறிப்பிடுகையில், "எமது உரிமைகள், எமது எதிர்காலம், இதோ இப்போதிருந்து" என்ற 2024 ஆம் ஆண்டு சர்வதேச மனித உரிமைகள் தின கருப்பொருளுடன் ஒரு தேசமாக நாம் ஒன்றுபட வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

இந்தக் கருப்பொருள் மனித உரிமைகளின் பாதுகாப்பும் மேம்பாடும் ஒரு சிறந்த எதிர்காலத்திற்காகப் பாடுபடுவதற்கான இலட்சியங்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல், நிகழ்காலத்திற்கு மிகவும் நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை எமக்கு நினைவூட்டுகிறது.

அனைத்து பிரஜைகளினதும் உரிமைகளையும் பாதுகாப்பது ஒரு நீதியான சமுதாயத்தின் அடித்தளமாக இருக்கின்ற அதேநேரம், இது அனைவருக்கும் கண்ணியம், சமத்துவம் மற்றும் சுதந்திரம் செழித்தோங்கும் ஒரு எதிர்காலத்திற்கான அடிப்படையாகும்.

இந்த உலகளாவிய உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அனைவருக்கும் நீதி மற்றும் வாய்ப்புகளை உத்தரவாதம் செய்யும் எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கும் எமது அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்பதை இந்த சிறப்புவாய்ந்த நாளில் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஒரு தேசமாக நாம் ஒன்றிணைந்து செயற்பட்டால், அனைவரினதும் மனித உரிமைகளை மதிக்கும், பாதுகாக்கும் மற்றும் கொண்டாடும் புதியதோர் உலகை உருவாக்க முடியும் என்று நான் நம்புகிறேன்." என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## தேசியப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகவே இவ்விடயங்கள் அனைத்தையும் ஆராயப்பட வேண்டும்.

இதனால் தான்,தேசிய பட்டியல் விவகாரத்தில் உறுதியான தீர்மானம் எடுப்பது கடினமாக உள்ளது. இதனால், தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி முழுமையாக மறுசீரமைக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் கடைப்பிடித்த கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் காரணமாகவே ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் பின்னடைவை எதிர்க்கொள்ள நேரிட்டது என்பதை முழுமையாக ஏற்றுக் கொள்கிறோம்.

மக்களின் மனங்களை வெல்லக் கூடிய வகையில் கட்சியை மறுசீரமைக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியுடன் மீண்டும் ஒன்றிணைய வேண்டும் என்று ஒரு சிலர் வலியுறுத்துகிறார்கள். இவை அனைத்தும் நிறைவேற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளேன். அனைவரும் ஒன்றிணைய வேண்டும், இணக்கமாக செயற்பட வேண்டும், மறுசீரமைப்புக்களை முன்னெடுக்க வேண்டும் " என்றார்.

(ஐ-09)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.12.2024 இல் வெளியிடப்பெற்றது.